முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராமநாதபுரம் அவர்கள் முன்பாக.

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051805

1. District மாவட்டம் : இராமநாதபுரம் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 6/2020 Date: நாள் 18.11.2020

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு (திருத்தம்) Sections பிரிவுகள்: 7(a) & 8(1) ஊழல் தடுப்பு
(ii) Act சட்டம்: சட்டம் 2018 Sections பிரிவுகள்: (திருத்தம்) சட்டம் 2018
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 10.06.2020 க்கு Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு முன்பாக Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.11.2020 Time : நேரம் காலை 10.45 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-II Time : நேரம் காலை 11.30 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக மதுரை உயர்நீதிமன்ற உத்தரவின் தொடர்ச்சியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.M. கோவிந்தராஜா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முனியாண்டி பிள்ளை
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி 7/216H, தர்மராஜபுரம், மஞ்சள் பட்டினம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. ரவீந்திர பிரகாஷ், முன்னாள் காவல் துணை கண்காணிப்பாளர், மாவட்ட குற்றப்பிரிவு, இராமநாதபுரம்,

2) திருமதி. ஜெயபிரிட்டா முன்னாள் காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு, இராமநாதபுரம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

3) திரு.குரு.ஜெயராமன்,
த/பெ குருசாமிபிள்ளை,
தெளிச்சாத்த நல்லூர்,
பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.

4) திரு.எம்.எஸ்.சுந்தரேசன்,
த/பெ சாமிகண்ணுபிள்ளை,
மேலச்சத்திரம், பரமக்குடி.
இராமநாதபுரம் மாவட்டம்.

5) திரு.நா.இளங்கோவன்,
த/பெ நாகலிங்கம்,
பாரதி நகர், பரமக்குடி.
இராமநாதபுரம் மாவட்டம்.

6) திரு.அ.முத்துமருது,
த/பெ அழகுபிள்ளை,
பாரதி நகர், பரமக்குடி.
இராமநாதபுரம் மாவட்டம்.

7) திரு.ஏ.கே.சுகுமாரன்,
குமரையா பிள்ளை,
காட்டுப்பரமக்குடி,
பரமக்குடி, இராமநாதபுரம்
மாவட்டம்.

8)திரு.ஆர்.எஸ்.ரவிச்சந்திரன்,
த/பெ ராமநாதன் பிள்ளை,
அனுமார் கோவில் தெரு,
பரமக்குடி, இராமநாதபுரம்
மாவட்டம்.

9)திரு.பி.ஜி.நீலமணிவாசகன்,
த/பெ குருசாமி,
கும்பா வெங்கடாசலபதி
தெரு, பரமக்குடி,
இராமநாதபுரம் மாவட்டம்.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed திரு. உன்னி கிருஷ்ணன் Rank ....DSP V&AC to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
UNNIKRISHNAN. S
காவல் துணை கண்காணிப்பாளர்
லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.11.2020 at 12.45 Hrs.

Name: பெயர்
Rank: நிலை ..................... No. எண் ....... DSP V&AC Ramnad.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 06/2020 பிரிவு 7 (a) மற்றும் 8 (1) ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018 வழக்கின் தொடர்ச்கி:

அய்யா, பணிந்து சமர்ப்பிக்கிறேன் : மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளை Crl.OP (MD) No.6658, 6486 of 2020 மற்றும் Crl.MP (MD) Nos.3325 மற்றும் 3367/2020-ன் படி இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் அலுவலக குறிப்பாணை எண். PE 52/2020/POL/RM, நாள் 09.09.2020 ன்படி முதல் கட்ட விசாரணையின் தொடர்ச்சியாக காவல்துறை தலைவர், சென்னை அவர்களின் Rc.No.609107/Crime.3 (2)/2020, நாள் 08.09.2020 மற்றும் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் அலுவலக குறிப்பாணை எண்.25951/2020/POL/SA14, நாள் 07.11.2020படி இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண் 37/2020 பிரிவு 448, 420, 465, 406 இ.த.ச. வழக்கு கோப்பு மற்றும் அதில் இணைக்கப்பட்டுள்ள புகார் மனுவினை பார்வையிட்டு, புகார் மனுவின் தன்மைக்கேற்ப இன்று 18.11.2020 ஆம்தேதி காலை 11.30 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 06/2020 பிரிவு 7 (a) மற்றும் 8 (1) ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018-ன்படி வழக்கு பதிவு செய்தேன். வழக்கின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் M.கோவிந்தராஜா S/o முனியாண்டி பிள்ளை (பொருளாளர்) வ.உ.சி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கல்வி சங்கம், 7/216H தர்மராஜபுரம், மஞ்சள்பட்டிணம், பரமக்குடி. பெறுநர் உயர்திரு.காவல் கண்காணிப்பாளர் அவர்கள், காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், இராமநாதபுரம். பொருள் 1) சிவகங்கை மாவட்ட பதிவாளர் வழங்கிய புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்ட படிவம் 7க்கு எதிராகவும் சட்டத்திற்கு எதிராகவும் கருத்து பெற்று பள்ளியை ஆக்கிரமித்து பணத்தை கையாடல் செய்தது தொடர்பாகவும். 2) DCP RMD 12/2019 வழக்கை சட்டத்திற்கு விரோதமாக பதிவு செய்ய காரணமானவர்கள் மீது வழக்குப் பதிவு செய்தல் தொடர்பாகவும். ஐயா நான் மேற்படி முகவரியில் வசிக்கிறேன் பரமக்குடியில் உள்ள வ.உ.சி. கல்வி சங்கத்தின் பொருளாளராக இருந்து வருகின்றேன். எங்களது வ.உ.சி. மெட்ரிகுலேஷன் பள்ளி கல்வி சங்கத்திற்கு 3 ஆண்டுகள் நிறைவடைந்ததை தொடர்ந்து தலைவர் 9/1/2019 தேதி முறையாக பொதுக்குழு தினசரி நாளிதழில் வெளியிடப்பட்டு அந்தக் கூட்டம் முறையாக பரமக்குடியில் சிவஞானம் செட்டியார் மஹாலில் நடைபெற்றது. அதன் மூலம் தேர்தல் அதிகாரி நியமிக்கப்பட்டு முறையாக தேர்தல் சங்க சட்ட துணை

விதிமுறைகளின்படி பின்பற்றப்பட்டு புதிய நிர்வாகிகள் 20/1/2009 ஆம்தேதி தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்கத்தின் அனைத்து நடைமுறை ஆவணங்களையும் தேர்தல் அதிகாரியின் சான்றிதளோடு சிவகங்கை மாவட்ட பதிவாளர் அவர்களின் அலுவலகத்தில் கோர்வைக்கு மனு செய்தோம். கோர்வையை ஏற்றுக் கொண்ட பதிவாளர் அவர்கள் புதிய நிர்வாகிகளான எங்களுக்கு 8/2/2019 படிவம்-7 வழங்கி ஆணை பிறப்பித்தார். அதுவரை எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்த M.S.சுந்தரேசன் தரப்பினர் நாங்கள் 20/1/2019 பொறுப்பேற்று 2 மாதங்களுக்கு பிறகு வரவு செலவு கணக்கு கேட்டவுடன் தர மறுத்த சுந்தரேசன் அவர்கள் பள்ளியை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 2/3/2019 அன்று தேர்தல் தொடர்பாக நடந்த விஷயம் யாவும் தனக்கு தெரியாது என்பது போல் ஒரு போலியான புகார் ஒன்றை மாவட்ட குற்றப்பிரிவு காவல் அலுவலகத்தில் அளித்தார் தேர்தல் தொடர்பாக பிரச்சனை இருந்தால் முதலில் மாவட்ட பதிவாளர் அவர்களிடம் கூறி விளக்கம் பெறலாம். அதில் திருப்திகரமாக இல்லை என்றால் நீதிமன்றத்தை நாடலாம் இது சட்ட விதி இந்த சட்டத்திற்கு எதிராக குறுக்கு வழியில் பள்ளியை கைப்பற்ற நினைத்த M.S. சுந்தரேசன் தரப்பினர் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் அளித்த போலியான புகாரில் தேர்தல் நடந்தது செல்லாது என்றும் இது போலியானது என்றும் இதற்கு பரிகாரம் தேடி தருமாறும் புகார் அளித்ததின் பேரில் தேர்தல் தொடர்பான விஷயத்தில் மாவட்ட குற்றப்பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.ரவீந்திரபிரகாஷ் அவர்கள் சுந்தரேசனுக்கு கூடுதல் ஆர்வம் எடுத்து அவருக்கு ஆதரவாக மாவட்ட பதிவாளரை மிரட்டி சட்டத்திற்கு எதிரான 6/3/2020 மற்றும் 7/3/2020 ஆகிய இரண்டு கருத்தைப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்று பொறுப்பு வகித்த எங்களை அகற்றி M.S.சுந்தரேசன் தரப்பினரை பள்ளி நிர்வாகத்தில் இருக்கச் செய்தார் இதன் மூலம் பள்ளியை ஒரு வருட காலமாக சட்டத்திற்கு விரோதமாக நுழைந்து பள்ளியின் பணத்தை கைப்பற்றி கையாடல் செய்து குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளனர். இந்த சட்ட விரோத செயலுக்கு காரணமாக இருந்த திரு.M.S.சுந்தரேசன், N.இளங்கோவன், A.முத்துமருது, AK.சுகுமாரன், R.S.இரவிச்சந்திரன் ஆகியோர் மீது விசாரணை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இதனைத் தொடர்ந்து முந்தைய ஆவணங்களை ஆய்வு செய்ததில் 2015-2016 கல்வியாண்டில் போலியான ஆவணத்தை பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்ததில் M.சரவணன் என்பவர் ப்ரீத்தி மருத்துவமனையில் 7/10/2016 இல் அனுமதித்து அறுவை சிக்சிசை நடைபெற்று

கொண்டிருந்த அன்று பொதுக்குழு நடந்ததாகவும் அதில் சரவணன் என்பவர் கூட்டத்திற்கு வந்ததாகவும் போலியான ஆவணங்களை தயார் செய்து பதிவாளர் அலுவலகத்தை ஏமாற்றியுள்ளார். இதற்கான ஆதாரமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது போன்ற பல்வேறு முறைகேடுகளையும் தொடர்சியாக செய்து வருகின்றனர். மேலும், குரு.ஜெயராமன் என்பவர் 9/1/2019 பொதுக்குழு கூட்டம் அன்று நடைபெறவில்லை என்றும் இது போலியானது என்றும் குரு.ஜெயராமன் மாவட்ட குற்றப்பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் 25/3/2019 ல் ஒரு புகார் அளித்தார். மேற்படி வ.உ.சி. கல்வி சங்கம் முறைப்படி தேர்தல் நடத்தி மாவட்ட பதிவாளர் அவர்களால் தேர்தல் அங்கீகரிக்கப்பட்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி படிவம்–7 வழங்கப்பட்டுள்ள நிலையில் சட்டப்படி கல்வி சங்கத்திற்கு நடைபெற்ற தேர்தல் சங்கங்கள் பதிவுச் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டு எங்களுக்கு வழங்கப்பட்ட படிவம்–7 ஆகிவற்றை ஆட்சேபிக்க முடியாது. குரு ஜெயராமன் என்பவர் தீர்மான புத்தகத்தில் அவர் போட்ட கையெழுத்தை மறுத்து அது பொய்யாக போடப்பட்டு உள்ளதாகவும் என்னைப்போலவே மேலும் மேற்படி தீர்மானத்தில் கையெழுத்திட்ட K.ராதாகிருஷ்ணன், K.விஜயகுமார், R.ராஜசேகரன், K.அரவிந்தன், N.முருகன் ஆகியோரது கையெழுத்துகளையும் ஆட்சேபனை செய்து மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்த மனுவின் அடிப்படையில் எங்கள் தரப்பு நியாயத்தை கேட்காமலும் ஒரு தலைபட்சமாக ராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மேற்படி காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோர் மேற்படி குரு ஜெயராமனுக்கு ஆதரவாக இருந்து கொண்டு குற்ற எண் RMD/DCP – 12/2019 வழக்கு பதிவு செய்துள்ளனர். ஜெயராமன் என்பவர் 25/3/2019 அளித்த புகாரின் அடிப்படையில் மாவட்ட குற்றபிரிவு அலுவலகத்திற்கு விசாரணைக்கு நாங்கள் மறுநாள் நேரில் ஆஜரானோம். அன்று இது தேர்தல் சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதால் நீதிமன்றத்தில் முறையிடுமாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கூறினார். அதனடிப்படையில் எதிர்தரப்பினரான குருஜெயராமன் தரப்பினர் 27/4/2019 அன்று பரமக்குடி சார்பு நீதிமன்றத்தில் சிவில் வழக்கு OS/NO 51/2019 வழக்கு பதிவு செய்து வழக்கு நடந்து கொண்டிருக்கும் வேளையில் சட்டத்திற்கு எதிராக RMD/DCP – 12/2019 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆவணங்களை சரிவர ஆய்வு செய்யாமலும் புகாரில் வழங்கப்பட்ட N.முருகன் என்பவர் மீண்டும் 4/11/2019 – 72AB942788 உறுதிமொழி

ஆவணத்தில் 9/1/2019 அன்று தான் பொதுக்குழுவில் கலந்து கொண்டேன் என்றும் அதில் கையெழுத்து நான் தான் பதிவிட்டேன் என்றும் உறுதிமொழி ஆவணத்தை தந்துள்ளார். இதிலிருந்தே இந்த வழக்கு போலியாக உருவாக்கப்பட்டுள்ள என்பது தெரிய வரும். ஆவணங்களை சரிவரி ஆய்வு செய்யாமலும் மேலும் இவ்வழக்கை பதிவு செய்ய ரூபாய் 10,00,000 (10 லட்சம்) மாவட்ட குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த பணத்தை குரு.ஜெயராமன், M.S.சுந்தரேசன், N.இளங்கோவன், A.முத்துமருது, A.K. சுகுமாறன், R.S.ரவிச்சந்திரன், PG நீலமணிவாசகன் ஆகியோர் சேர்ந்து நேரடியாக கொடுத்ததாக 12/2019 வழக்கின் புகார் தாரரான குரு ஜெயராமன் வாக்குமூலம் அளித்துள்ளார். லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் இந்திய தண்டனை சட்டத்தின் படி குற்ற செயலாகும். இந்த குற்றசெயல் சம்பந்தமான ஆதாரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டு அரசாங்கத்தையும் அரசு அதிகாரிகளையும் சட்டத்திற்கு விரோதமாக பயன்படுத்தி கையூட்டு வழங்கி குற்றச்செயல் புரிந்துள்ளனர். மேற்கண்ட குற்றங்களில் ஈடுபட்ட M.S.சுந்தரேசன், N.இளங்கோவன், A.முத்துமருது, A.K.சுகுமாறன், R.S.ரவிச்சந்திரன், PG நீலமணிவாசகன் ஆகியோர் மீது விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இணைப்பு 1) சிவங்கை மாவட்டபதிவாளர் அவர்களிடமிருந்து 6/3/2019, 7/3/2019 சட்டத்திற்கு எதிராக இரண்டு சொந்த கருத்தை பெற்றதற்கான நகல், 2) RMD /DCP – 12/2019 படி வழக்கு பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கை நகல், 3) 12/2019 வழக்கை சட்டத்திற்கு எதிராக கையூட்டு கொடுத்ததற்கான புகார்தாரர் குரு.ஜெயராமன் அவர்கள் கொடுத்த நேரடி வாக்குமூலம் வீடியோவின் CD, 4) M.சரவணன் என்பவருக்கு ப்ரீத்தி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்ததற்கான ஆதார நகல். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள (Sd xxxx) தேதி : 8.6.2020 இடம் : பரமக்குடி. மேற்படி புகார் சம்பந்தமாக இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண். 06/2010 பிரிவு 7 (a) மற்றும் 8 (1) ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018–ன்படி இன்று 18.11.2020 ஆம்தேதி காலை 11.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலை இராமநாதபுரம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அவர்களுக்கும், நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

18/11/2020

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்.